எனது இல. : மமாச/ ஏ/ 12/ 90/ (XII)

## மத்திய மாகாண சபை

மேலே கூறப்பட்ட நியதிச் சட்டம், 1991, நவம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற மத்திய மாகாண சபையின் சபைக்கூட்டத்தின் போது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதோடு, இல. ஜீசீபி/ஏஎஸ்/3 உம் 1992, ஜனவரி 8 ஆம் தேதியும் கொண்ட கடிதத்தின்படி, அதற்கு மத்திய மாகாணத்தின் கௌரவ ஆளுநருடைய அங்கீகாரம் கிடைத்துள்ளது என இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பீ. ஆர். ரணசிங்க,
சபைச் செயலாளர், மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண சபை,
சபைச் செயலகம்,
த. பெ. 92,
பள்ளேகளை, குண்டசாலை,
1992, ஆகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி.

## மத்திய மாகாண மாகாண சபையின், 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம்

**மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என வழங்கப்படுவதான ஆணைக்குழுவொன்றினை அமைப்பதற்கும் ஒருங்கிணைப்பதற்கும், மத்திய மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த ஊழியர்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகளுக்கும் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்காகவும் ஆனதொரு நியதிச்சட்டமாகும்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின், மத்திய மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாகுக.

**சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இந்நியதிச்சட்டம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையின், 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் பெற்ற அவ்வாறான தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**கூட்டுறவுச் சங்க இந்நியதிச் சட்டத்தின் இதனகத்துப் பின்னர் வருவதான ஏற்பாடுகளிலிருந்து விலக்களிப்பதற்கான அமைச்சருக்குரிய தத்துவங்கள்.**

2. (அ) ஏதேனும் ஒரு வகை சார்ந்த கூட்டுறவுச்சங்கங்களை அவ்வாறு குறித்துரைப்பதன் மூலம், அல்லது

(ஆ) விசேடமாகக் குறித்துரைக்கப்படுவதான கூட்டுறவுச் சங்கமொன்றினை இதன் பின்னர் குறிக்கப்படுவதான ஏற்பாடுகளின்று விலக்களிப்பதற்கான கட்டளையொன்றினை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதன் மூலம்

அமைச்சரானவர் விலக்களிக்கலாம்.

அதற்கொத்தவாறு இதனகத்துப் பின்னர் வருவதான ஏற்பாடுகளில் " கூட்டுறவுச் சங்கம்" எனும் சொற்றொடர் மேற்காட்டிய விலக்களிக்கப்பட்டதான சங்கங்கள் தவிர்ந்த கூட்டுறவுச் சங்கங்களைக் குறிப்பனவாயமைதல் வேண்டும்.

### பாகம் 1

### கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அமைப்பும் அதன் தத்துவங்களும் செயற்பாடுகளும்

**கூட்டுறவு ஆணைக்குழுவைத் தாபித்தல்.**

3. இந்நியதிச் சட்டத்தின் தேவைக்காக, மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என அழைக்கப்படுவதும் வழங்கப்படுவதுமான அதிகார சபையொன்று அமைக்கப்படல் வேண்டும்.

**ஆணைக்குழுவின் அமைப்பு.**

4. (1) ஆணைக்குழுவானது இப்பிரிவின் கீழ் காட்டப்படுவதான ஏற்பாடுகளுக்கமைவாக அமைக்கப்படல் வேண்டும்.

(2) மாகாண பிரதம அமைச்சரின் அனுசரணையுடன் அமைச்சரால் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்களைக் கொண்டதாக ஆணைக்குழு அமைதல் வேண்டும்.

(3) (அ) கூட்டுறவுச் சங்கமொன்றின் ஊழியர் அல்லது முன்னால் ஊழியர் ஒருவர், அல்லது

(ஆ) எவ்வகையைச் சேர்ந்ததுமான கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களது, சம்பளம், அல்லது சேவை சம்பந்தப்பட்ட விடயங்களைத் தனது நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்ட தொழிற் சங்கமொன்றின் அல்லது அமைப்பொன்றின் அங்கத்தவரென அமைச்சரால் கருதப்படும் ஒருவர், அல்லது

(இ) கூட்டுறவுச் சட்டத்தின் கருத்திற்கமைய கூட்டுறவுச் சங்க அலுவலர் எனப்படுமொருவர், அல்லது

(ஈ) தற்போது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் ஒருவராக இருக்கும் ஆளொருவர்

அத்தகைய ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவராக நியமித்தல் தகுதியற்றதாதல் வேண்டும்.

**ஆணைக்குழுவை ஒருங்கமைந்த அமைப்பொன்றாக்குதல் வேண்டும் என்பது.**

5. ஆணைக்குழுவானது, தனக்கென பொது முத்திரையொன்றையும் தொடர்பராத பாரம்பரியத்தையும் கொண்ட ஒருங்கமைந்த அமைப்பொன்றாதல் வேண்டும். அவ்வொருங்கமைப்பானது சட்டநடவடிக்கை எடுக்கக் கூடியதானதும், சட்ட நடவடிக்கை எடுக்கப்படக்கூடியதுமான தாபனமாதல் வேண்டும்.

அங்கத்தவர்களின் பதவிக் காலம்.

6. ஆணைக்குழு அங்கத்தவர்கள், தாம் நியமனம் பெற்ற தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்குப் பதவி வகிக்கக்கூடியதாதல் வேண்டும். எனினும் நியமன விதிகளுக்கப்பால்—

(அ) அங்கத்தவரெவரும் எச்சந்தர்ப்பத்திலும் பதவி விலகலாம் அல்லது அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

(ஆ) இதன் 4(3) பிரிவின் கீழ் ஒருவர் அங்கத்தவராயிருக்கும் தகுதியிழக்குமிடத்து அவரது இடம் வெற்றாதல் வேண்டும்.

பதவி விலகல், பதவி நீக்கம், பதவி வெற்றாகல் அல்லது மரணம் காரணமாக ஏற்படும் வெற்றிடமொன்றிற்காக நியமிக்கப்படுமொருவர் தானே கேட்டு விலகாதவிடத்து அப்பதவி வெற்றாக்கப்பட்ட அங்கத்தவரின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

ஆணைக்குழுவும் அதன் கடமைகளை நடைமுறைப்படுத்தலும்.

7. (1) ஆணைக்குழுவின் அங்கத்தவர்களில் ஒருவரை தவிசாளராக அமைச்சரினால் நியமிக்கப்படல் வேண்டும். தவிசாளர் சமுகமளித்திருக்கும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஆணைக்குழுவின் எல்லா அமர்வுகளுக்கும் அவரே தலைமை வகித்தல் வேண்டும். ஆணைக்குழுவின் ஏதாவது ஓர் அமர்விற்கு தவிசாளர் சமுகம் தராத பட்சத்தில் சமுகமளித்திருக்கும் அங்கத்தவர்கள் இருவரின் ஒருமைப்பாட்டுடன் அவர்களில் ஒரு அங்கத்தவரினால் அமர்வின் தலைமைத்துவம் எடுக்கப்படல் வேண்டும்.

(2) ஆணைக்குழு அமர்விண் நடப்பெண் இரண்டாகும்.

(3) இரண்டு அங்கத்தவர் மட்டுமே சமுகமளித்துள்ள ஆணைக்குழுவின் அமர்வொன்றின் எடுத்துக் கொள்ளப்படல் விடயமொன்று தொடர்பாக அவ்விரு அங்கத்தவர்களும் வேறுபட்ட கருத்தினை உடையவராயிருப்பின், அவ்விடயமானது மூன்று அங்கத்தவர்களும் சமுகமளிக்கும் அமர்வொன்றின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(4) மூன்று அங்கத்தவர்களும் சமுகமளித்துள்ள ஆணைக்குழுவின் அமர்வொன்றின் போது எடுக்கப்படும் விடயமொன்றில் அங்கத்தவர்கள் வேறுபட்ட கருத்துடையவராயிருப்பின் பெரும்பான்மை அங்கத்தவர்களின் கருத்துப்படி முடிவெடுக்கப்படல் வேண்டும். அங்கத்தவர்களுள் சமமான அளவு பிரிபட்ட கருத்துள்ளவிடத்து தவிசாளர் தனது தீர்மான வாக்கினைப் பிரயோகிக்க உரித்துடையவராதல் வேண்டும்.

(5) இந்நியதிச்சட்டத்தினால், அல்லது அதன் உப விதிகள் எவற்றாலும் குறித்துரைக்கப்படாத விடயம் தொடர்பாக ஆணைக்குழுவானது தானே உபவிதிகளை ஆக்கிக்கொள்ளலாம்.

(6) ஆணைக்குழு அங்கத்துவம் வெற்றிடமாயிருத்தல் அல்லது ஆணைக்குழுவிற்கான நியமனம் தொடர்பிலுள்ள பிசகுகள் காரணமாய் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுகள் செல்லுபடியற்றதாகாததாதல் வேண்டும்.

அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவுகளைக் கொடுத்தல்.

8. மாகாணத்தின் நிதிவிடயத்திற் பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்து அமைச்சரானவர், ஆணைக்குழுவின் தவிசாளர் அங்கத்தவர் என்போரின், வேதனம் கொடுப்பனவுகள் என்பவற்றை தீர்மானிக்கலாம்.

செயலாளரும் ஏனைய உத்தியோகத்தர்களும்.

9. (1) ஆணைக்குழுவிற்கென செயலாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். அச் செயலாளர் இலங்கை நிர்வாக சேவையைச் சார்ந்தவராதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவிற்கான ஏனைய அலுவலர்கள் மத்திய மாகாண அரச சேவையைச் சார்ந்தவராதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்களும் ஏனைய உத்தியோகத்தர்களும் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளல்.

10. (1) முதல் நியமனத்தின் போது ஆணைக்குழு அங்கத்தவர்கள் அனைவரும் இந்நியதிச்சட்டத்தின் பின் இணைப்பிற் காட்டியவாரான சத்தியப் பிரமாணம் / அல்லது பிரகடனமொன்றினை அளித்தல் வேண்டும்.

(2) தவிசாளரினால் தேவைப்படுவது எனக்கருதும்வாராக ஆணைக்குழுவின் செயலாளர், ஏனைய அலுவலர்களிடம் ஆணைக்குழுவிற்கென நியமனம் பெறும் முதற் சந்தர்ப்பத்தில் இந்நியதிச் சட்டத்தின் பின் இணைப்பிற் காட்டியவாறான சத்தியப் பிரமாணம் அல்லது பிரகடனம் ஒன்றினைப் பெறல் வேண்டும்.

ஆணைக்குழுவிற்கு உரித்தான தத்துவங்கள்.

11. (1) ஆணைக்குழு பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாதல் வேண்டும் :—

(அ) கூட்டுறவுச் சங்கங்களின் சேவைக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகள், ஊழியர்களுக்கான சேவை நிபந்தனைகள், கூட்டுறவுச் சங்கங்களினால் நியமனங்கள் வழங்கள், பதவியுயர்வு வழங்கல் என்பவற்றில் பின்பற்ற வேண்டியதான கொள்கைகள் என்பவை தொடர்பான விடங்களிலும் தீர்மானம் மேற்கொள்ளல்.

(ஆ) ஊழியர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சைகள் நடாத்துதல் அல்லது அவ்வாறான பரீட்சைகள் நடாத்துதற்கான பரீட்சைச் சபைகளை நியமித்தல், அவ்வாறான பரீட்சைக்குத் தோற்றுபவர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணமொன்றை அறவிடல்.

(இ) ஒவ்வொரு பவிக்குமான குறைந்தப் பட்ச தகைமைகளை வரையறுத்தல் அவ்வாறான பதவிகளின் ஒவ்வொரு தரத்திற்குமான சம்பள விகிதங்களை நிர்ணயித்தல், தேவைக்கேற்ப அவ்வாறான சம்பள விகிதங்களை ஆணையாளரின் அனுசரணையுடன் திருத்தியமைத்தல். ஊழியர்களுக்கான சேவை நிபந்தனைகள், சம்பள விகிதங்கள் என்பவற்றைத் தீர்மானிப்பதில், ஆணைக்குழுவிற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கான ஆலோசனைக்குழுக்களை அமைத்தல்.

(ஈ) கூட்டுறவுச் சங்கப்பதவிகள், தரங்கள், வகுப்புக்கள் என்பவற்றிற்காக நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதங்களை வழங்குமாறு சங்கங்களை பணித்தல்.

(உ) கூட்டுறவுச் சங்கங்களினால் அதன் ஊழியர்களுக்கெதிராக எடுக்கப்படக்கூடியதான ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை நிர்ணயித்தல் ஊழியரொருவருக்கெதிராக நடாத்தப்படும் ஒழுங்காற்று நடவடிக்கையை குறித்தவொரு கால எல்லைக்குள் முடிவுறச் செய்யுமாறு கூட்டுறவுச் சங்கமொன்றைப் பணித்தல் கூட்டுறவுச் சங்கமொன்றினால் வழங்கப்பட்ட ஒழுக்காற்றுத் தீர்ப்பொன்றிற்கெதிராக கிடைக்கப்பெறும் மேன் முறையீட்டினை விசாரித்தல்.

(ஊ) குறித்தவொரு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் தொடர்பாய் குறித்துரைக்கப்பட்டதான பதிவேடுகளைப் பேணுமாறு பணித்தல்.

(எ) குறித்தவொரு சங்கத்தின் ஊழியர் தொடர்பாய் அவசியமெனக் கருதப்படுவதான கோவைகள், ஆவணங்கள் அல்லது வேறு விபரங்களை குறித்த தேதியொன்றிற்கு முன்னர் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பணித்தல்.

(ஏ) மேன்முறையீடுகள் தொடர்பாய் விசாரணைகள் மேற்கொள்ள அவசியமெனக் கருதப்படுவதானவாறு விசாரணைக்குழுவொன்றினை அல்லது விசாரணைக் குழுக்குளை நியமித்தல் விசாரணைகளை நடாத்துமாறு அக்குழுக்களை பணித்தல்.

(ஐ) சங்க ஊழியரொருவரின் நடத்தை தொடர்பாக நடாத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையொன்றின் மீது சங்கத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றிற்கெதிராக அவ்வூழியரால் செய்துகொள்ளப்பட்ட மேன்முறையீடொன்றின் பேரில் ஆணைக்குழு வழங்கும் பணிப்புரைகளை, அவை மீண்டும் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான பணிப்பொன்றாயினும், அவ்வாறான பணிப்புரையை செயல்படுத்த நிர்ப்பந்தித்தல்.

(ஒ) வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டியதான நன்கொடைப்பணம், வேறு கொடுப்பனவுகள் தொடர்பான பொதுவிதிகளை நிர்ணயித்தல்.

(ஓ) ஆணையாளரின் அனுசரணையுடன், இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினின்றும் ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது ஏதேனுமொரு வகைசார்ந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு விலக்களிப்பது தொடர்பாய் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல்.

(ஔ) மாகாண சபையின் அனுமதியுடன் அமைச்சரானவர் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரித்து வழங்குவதான ஆணைகளின் மூலம் ஆணைக்குழுவின் பால் அளிக்கப்படுவதான கூட்டுறவுச் சங்கங்கள், அதன் ஊழியர்கள் தொடர்பிலான தத்துவங்களை செயல்படுத்தல்.

(2) இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் அமைவதான தத்துவங்களை ஆணைக்குழு செயற்படுத்தலின் போது தான் எடுத்த முடிவொன்றினை அல்லது வழங்கப்பட்ட தீர்ப்பொன்றினை திருத்தியமைக்கலாம் மாற்றலாம் அல்லது புதுப்பிக்கலாம்.

12. ஆணைக்குழுவின் நடைமுறைச் செலவுகள் யாவும் மாகாண சபையினால் இதற்கென ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளப்படல் வேண்டும். நிதி ஏற்பாடுகள்.

## பாகம் 2

### கூட்டுறவுச் சங்கங்களும் அதன் ஊழியர்களும்

13. குறித்த ஊழியரொருவருக்கு அவருக்கான சம்பளம் மட்டும் கொடுப்பனவுகளை வழங்குவதான கூட்டுறவுச் சங்கமொன்றானது அவ்வூழியரின் வேலை கொள்வோராதல் வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தை ஊழியர் வேலைகொள்வோராகக் கருதுதல்.

கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் அலுவலர்களும் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்படல் வேண்டும் என்பது.

14. எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் ஊழியர்களும் ஆணைக்குழுவின் பணிப்புகளுக்கு ஆட்பட்டோராதல் வேண்டும். இந்நியதிச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவிற்கமைவாக ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளதான தத்துவங்களை, செயற்படுத்துவதில், பிரயோகிப்பதில் மேற்கொள்ளப்படுவதான முடிவுகள் இறுதியானவை, அமைச்சரால் இந்நியதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய விலக்களிக்கப்பட்டதான கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் ஊழியர்கள் தவிர்ந்த அனைத்து சங்கங்களும் அவற்றின் ஊழியர்களும் ஆணைக்குழுவின் அவ்வாறான முடிவுகளுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கு பணிந்து நடப்பதற்கு கடப்பாடு உடையவராதல் வேண்டும் என்பது.

15. ஏதேனுமொரு கூட்டுறவுச் சங்கத்தின் எவரேனுமோர் ஊழியருக்கெதிராக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றானது 11 (2) ஆம் பிரிவிற்கு அமைவாக இறுதியானது. அவ்வாறான தீர்ப்பு அவ்வூழியருக்கு அக் கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கொப்பான கடப்பாட்டினை வேண்டுவதாதல் வேண்டும்.

சேவை நிபந்தனைகளையும், நடைமுறைவிதிகளையும் ஏற்றுக்கொள்ளல் பற்றிய விருப்பத்தை தெரிவித்தல்.

16. (1) மாகாண ஆணைக்குழு தனக்கென புதிய சேவை நிபந்தனைகளையும் நடைமுறை விதிகளையும் ஆக்கும் வரையில் 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தினால் ஆக்கப்பட்டு நடைமுறையில் இருப்பதான நிபந்தனைகள், நடைமுறை விதிகள் என்பன தொடர்ந்தும் வலுவுடையதாதல் வேண்டும்.

(2) தற்போது சேவையில் இருப்பவர்களான கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தாம் அவ்வாறு விரும்புமிடத்து, தொடர்ந்தும் அவர்கள் நியமனம் பெற்றபோது நடைமுறையிலிருந்ததான நிபந்தனைகள் நடைமுறை விதிகளுக்குட்பட்டு சேவையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

(3) ஊழியர் ஒருவர் தான் பதவியேற்றபோது நடைமுறையில் இருந்த நிபந்தனைகட்குட்பட்டு சேவையாற்ற விரும்புமிடத்து அவருக்கு வழங்கப்படுவதான பதவியுயர்வொன்றை இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் ஏற்குமிடத்து புதிதாயமையும் நிபந்தனைக்குட்பட்டு நடப்பதற்கு ஒப்புதல் அளித்தல் வேண்டும்.

இருக்கும் ஊழியர்களின் சேவை நிபந்தனைகளை பரிசீலனை செய்வதும் புதிய சேவை நிபந்தனைகளை விதித்தலும்.

17. (1) ஆணைக்குழுவானது தனது பூரண தற்றுணிபின் பேரில் அவ்வாறான ஊழியரொருவரை பரீட்சையொன்றின் மூலம், அல்லது வேறு வகையால் தான் வகிக்கும் அவ்வாறான பதவிக்குத் தகுதியும் திறமையும் கொண்டவர் என ஆணைக்குழுவைத் திருப்திப்படுத்துமாறு கேட்கப்படலாம்.

எனினும் இப்பிரிவில் காட்டப்பட்டதான ஏற்பாடு அவ்வாறாகக் குறித்துரைக்கப்படும் வகையொன்றை அல்லது வகைகளைக் கொண்ட ஊழியர்களை மட்டுமே பொருந்துவதாதல் வேண்டும்.

(2) இதன் 1 ஆம் உட்பிரிவிற்கமைவாக ஊழியரொருவர், தனது தகுதி, திறமை என்பவற்றில் ஆணைக்குழுவை திருப்திப்படுத்தத் தவறுமிடத்து ஆணைக்குழுவானது அவ்வூழியரது தகுதி, திறமை என்பவற்றிற் கொப்பானதெனக் கருதும் வேறு பதவியொன்றை வழங்க முயற்சித்தல் வேண்டும். அவ்வாறு வழங்க இயலாது போகுமிடத்து ஆணைக்குழுவானது தற்றுணியின் பேரில், அவ்வூழியரை, அவரது நியமன நிபந்தனைக்கமைவாக அல்லாதவிடத்து தகுந்தவொரு முன்னறிவித்தலின் பின்னர் சேவையினின்றும் நீக்கிவிடுமாறு கூட்டுறவுச் சங்கத்தை வேண்டலாம்.

(3) இதன் 1 ஆம் உட்பிரிவின் கீழ் ஊழியரொருவர் ஆணைக்குழுவின் நிபந்தனைகள், நடைமுறை விதிகளை ஏற்பதற்கான விருப்பத்தினை தெரிவித்தவொருவரெனினும், இப்பிரிவின் 1 ஆம் உட்பிரிவிற்கமைய ஆணைக்குழுவினைத் திருப்திப்படுத்தத் தவறுமிடத்து அவ்வாறான நிபந்தனைகள், நடைமுறை விதிகளுக்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.

வதிவு பற்றிய தகைமைகள்.

18. (1) மத்திய மாகாணத்தின் எந்தவொரு மாவட்டத்தினதும் கூட்டுறவுச் சங்க ஊழியராக நியமனம் பெற அம்மாவட்டத்தில் குறைந்த பட்சம் இரண்டு வருடகால நிரந்தர வதிவானவராயில்லாதவிடத்து தகுதியற்றவராதல் வேண்டும்.

(2) எனினும் குறித்த மாவட்டமொன்றின் கூட்டுறவுச் சங்கத்தின் எந்தவொரு பதவிக்கேதும் அம்மாவட்டத்துள் தகுதியான அபேட்சகர்கள் இல்லையென ஆணைக்குழு கருதுமிடத்து அவ்வாறான பதவிக்காக மாகாணத்தின் வேறு மாவட்டமொன்றிலிருந்து தகுதியானவர்களை நியமிப்பதற்கான அனுமதியை வழங்கலாம்.

19. கூட்டுறவுச் சங்கமொன்றின் பதவியொன்றிற்காக ஊழியர் ஒருவரை நியமிக்குமிடத்து இதன் 29 (1) பிரிவிற்கமைய குறித்துரைக்கப்பட்டதான அச்சங்கத்தின் தரம் குறித்த பதவியின் தரம், வகுப்பு என்பவற்றிற்கமைவான சம்பள விகிதத்தை வழங்குதல் வேண்டும்.

*ஊழியர்களின் சம்பள அளவுகளை சங்கங்களின் தரத்திற்கு ஏற்ப நிச்சயித்தல்.*

20. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளெவற்றிற்கும் பாதக மேற்படாதவாறு, ஆணைக்குழுவானது, மாகாண அரச சேவை ஆணைக்குழுவினதும் குறித்த கூட்டுறவுச் சங்கத்தினதும் அனுமதியுடனும் குறித்த அலுவலரின் விருப்பத்துடனும் மாகாண அரச சேவையைச் சேர்ந்த அலுவலரொருவரை பிரதியீட்டடிப்படையில், குறித்தவொரு கால எல்லைக்கு குறித்தவொரு நோக்கத்திற்காக குறித்த கூட்டுறவுச் சங்கம் பதவியொன்றிற்காக நியமிக்கப்படுவதை அனுமதிக்கலாம்.

*அரசாங்க ஊழியர்களை பிரதியீடு செய்தல்.*

21. கூட்டுறவுச் சங்கங்கள் அதன் சொந்த பணவொதுக்கிலிருந்து அதனதன் ஊழியர்களுக்கான வேதனங்களை வழங்குதல் வேண்டும்.

*கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் வேதனங்கள்.*

22. (1) கூட்டுறவுச் சங்கமொன்று தனது ஊழியரெவரையும் தனது வேலை நிலையமொன்றிலிருந்து தனது வேறு வேலை நிலையமொன்றிற்கு இடமாற்றம் செய்யத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும். அவ்வாறான இடமாற்றம் ஒழுக்காற்று நடவடிக்கை அடிப்படையிலானதொன்றல்லாத விடத்து அவ்வூழியரது வேதனத்தில் மாற்றமெதனையும் ஏற்படுத்தாதவொன்றாதல் வேண்டும்.

*கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் இடமாற்றங்கள்.*

(2) இரு வேலை கொள்வோரதும் இணக்கத்துடன், கூட்டுறவுச் சங்கமொன்றானது தனது ஊழியரொருவரை அவ்வாறான வேறு கூட்டுறவுச் சங்கமொன்றுடன் ஒத்துமாற்றிக் கொள்ளும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒத்துமாறும் ஊழியர் இருவரும் ஒத்த பதவிவகிப்பவராதல் வேண்டும்.

23. இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்டதான ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு ஏற்புடையதல்லாத வகையில் கூட்டுறவுச் சங்கமொன்றானது, அதன் ஊழியரெவரையும் பதவி நீக்கவோ அல்லது வேறெந்த வகையிலேனும் தண்டிக்கவோ கூடாததாதல் வேண்டும்.

*ஊழியர்களை பதவி நீக்கஞ் செய்தலும் தண்டித்தலும்.*

24. (1) எந்தவொரு கூட்டுறவுச் சங்கமும், ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்ட தொகைக்கதிகமாகக் காப்புப் பணமொன்றை தனது ஊழியரிடமிருந்து பெறல் ஆகாததாதல் வேண்டும்.

*கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் காப்புப் பணம்.*

(2) ஊழியர்களிடமிருந்து பெறப்பட்டதான காப்புப்பணம் சங்கத்தின் பெயரில் வங்கியொன்றில் வைப்பு செய்யப்பட்டு, அதனின்றும் பெறப்படும் வட்டியேதுமெனில் அவை அவ்வூழியருக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

25. (1) (அ) கூட்டுறவு ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம் பதவியுயர்வு இடமாற்றம், பதவிவிலகல், பதவிநீக்கம் தொடர்பான விடங்கள்,

*ஊழியர்களுக்கு தொடர்புடைய ஒழுங்கு விதிகள்.*

(ஆ) ஊழியர்களுக்காக சேவை நிபந்தனைகள், ஒப்பந்தங்கள் என்பவற்றை வரையறுத்தல் வேதனம், வேறு கொடுப்பனவுகள் நன்கொடை, முற்பணம் வழங்கள், பதவியுயர்வு, விடுமுறை (லீவு) என்பன வழங்கள், இடைநிறுத்தல், பதவி நீக்கம் செய்தல் சேவையை அறுதியாக்கல், வேறு தண்டனை வழங்கல், மேன்முறையீடு செய்வதற்கான ஏற்பாடுகள்.

(இ) அவசியமெனக் கருதப்படுவதான சேவை நிபந்தனைகள் ஊழியர் சேவைக்கட்டுப்பாடுகள்.

எனும் விடயங்களுக்கான உபவிதிகளை ஆக்கிக் கொள்ளலாம்.

(2) இதன் 1 ஆம் உட்பிரிவிற் காட்டப்பட்டதான விடயங்களுக்காக அமைக்கப்படுவதான உபவிதிகள் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் அதன் சகல ஊழியர்களையும் கட்டுப்படுத்துவதாதல் வேண்டும்.

26. மாகாணத்தின் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும்—

*ஊழியர்கள் தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் கடமைகள்.*

(அ) தனது சகல ஊழியர் தொடர்பிலும், குறித்துரைக்கப்பட்டதான பதவிகள், பதிவேடுகள் என்பவற்றைப் பேணுதல் வேண்டும். அவை கிரமமாகப் பேணப்படலும் வேண்டும்.

(ஆ) எல்லா ஊழியர் தொடர்பிலும் ஆணைக்குழுவினால் தேவைப்படுத்துவதான, காலத்துக்காலம் அனுப்பப்பட வேண்டியதான அறிக்கைகள், விபரங்கள் என்பனவற்றைக் கூட்டுறவுச் சங்கமானது ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) அவ்வாறான தத்துவமளிக்கப்பட்ட ஆணைக்குழு அங்கத்தவரொருவர் கூட்டுறவுச் சங்கமொன்றிற்குப் பிவேசிக்கவும் சங்கத்தின் எந்தவொரு பதிவேடு, கணக்குக் குறிப்பு மற்றும் பதிவுகளை அல்லது ஆவணங்களைப் பரிசீலனை செய்யவும், அவற்றின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளவும் அனுமதிக்கப்படல் வேண்டும்.

சேமலாப நிதியம்.

27. வேலைகொள்வோர் என்றவகையில் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சகல கூட்டுறவு ஊழியர்களும், தொழிலாளர் சேமலாப நிதிச் சட்டத்திற்கமைவாக தங்களால் செலுத்தப்பட வேண்டியதான சேமலாபப் பங்கினைச் செலுத்துதல் வேண்டும்.

கூட்டுறவு ஊழியர்கள் என்பது ஆணைக் குழுவில் அல்லாத சங்கத்தின் ஊழியர்களை மாத்திரம் குறிக்கும்.

28. சந்தேகங்களைத் தவிர்க்கும் நோக்குடன் இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வருமுன்னரும் அதன்பின்னரும் கூட்டுறவுச்சங்கமெதனிலும் சேவையாற்றும் ஊழியர்கள் அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் எனவும் அவ்வூழியர்கள் அவ்வக்கூட்டுறவுச்சங்கங்களுக்கும் கடப்பாடுடையவர்கள் எனவும் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

## பாகம் 3

### ஆணையாளரின் தத்துவங்கள்

சங்கங்களைத் தரம் பிரிப்பதும் பணியாளர்களின் ஆளணி எண்ணிக்கையை நிர்ணயிப்பதும் ஆணையாளரினால் செய்யப்படல் வேண்டும் என்பது.

29. (1) ஊழியர்களின் பதவிகளுக்கான சம்பள விகிதங்களை நிர்ணயிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்களை தரம் பிரிப்பதற்கும், ஊழியர்களுக்கான பதவிகளின் தரங்கள் வகுப்புக்கள் என்பவற்றை நிர்ணயிக்கவும் ஒவ்வோர் தரங்கள், வகுப்புக்கள் பதவிகள் என்பவற்றில் அனுமதிக்கக்கூடியதான ஆளணிக் கட்டுப்பாட்டை கூட்டுறவுச்சங்க வாரியாக முடிவு செய்வதற்கும் காலத்துக்குக்காலம் ஆளணி எண்ணிக்கையை மாற்றியமைக்கவும் ஆணையாளர் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இதன் 1 ஆம் உட்பிரிவில் காட்டியவாரான நிர்ணயம் முடிவு என்பவற்றிற்கு அப்பால் எவ்வூழியரையும் வேலைக்கமர்த்தும் தத்துவம் கொண்டதாய் கூட்டுறவுச்சங்கங்கள் அமையா.

தகைமைகள், சம்பள விகிதங்கள் தொடர்பாக ஆணைக்குழு ஆணையாளரின் ஆலோசனைகளைப் பெறல் வேண்டும் என்பது.

30. ஆணைக்குழுவானது ஆணையாளரின் ஆலோசனையுடன் கூட்டுறவு ஊழியர்களின், ஒவ்வொரு பதவிக்கும், அவற்றின் தரம் வகுப்பு என்பவற்றிற்கான குறைந்தபட்ச தகைமைகள் ஒவ்வொரு பதவியினதும், அவற்றின் தரம், வகுப்பு, என்பவற்றினதும் சம்பள விகிதம் என்பவற்றையும் நிர்ணயித்தல் வேண்டும். அத்துடன் காலத்துக்குக்காலம் அவசியப்படும் வாறான மாற்றங்களையும் மேற்கொள்ளல் வேண்டும்.

## பாகம் 4

### பொது

இடையூறுகளை அகற்றுதல்.

31. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துகையில் எழும் சந்தேகங்கள், இடையூறுகள் ஏதுமிருப்பின் அவற்றை தீர்த்துக் கொள்ளக்கூடியதான ஏற்பாடுகள் அல்லது எழும் பிரச்சினை தொடர்பாகப் பயன்படக்கூடியதான ஏற்பாடுகள் இந்நியதிச்சட்டத்தில் இல்லாதவிடத்து அமைச்சரானவர் விஷேட கட்டளையொன்றின் மூலம் அவ்வாறான விடயங்களை முடிவுறச் செய்யலாம். அவ்வாறான கட்டளைகள் ஒவ்வொன்றும் வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படல் வேண்டும். வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாவதுடன் கட்டளைகள் சட்டமொன்றினது வலுவினைப் பெறுதல் வேண்டும்.

ஆணைக்குழுவினால் உபவிதிகளை ஆக்கிக்கொள்ளலாம் என்பது.

32. (1) இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்நோக்கங்களுக்கும் வலுவமைவதற்காக விஷேடமாகக் குறித்துரைக்கப்படாத விடயங்கள் சார்பாக உபவிதிகளை ஆக்கிக்கொள்வது இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதற்கு அவசியமென ஆணைக்குழு கருதுமிடத்து அவ்வாறான விடயம் தொடர்பாய் உபவிதிகளை ஆக்கிக்கொள்ளவும், இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் உபவிதிகளை ஆக்கிக்கொள்ள அவசியப்படுத்தும் விடயங்கள் தொடர்பிலும் "குறித்துரைக்கப்பட்ட" வென இந்நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்படுவதான விடயங்கள் தொடர்பிலும் ஆணைக்குழுவானது உபவிதிகளை ஆக்கிக்கொள்ளலாம்.

(2) ஆக்கப்படுவதான உபவிதிகள் அனைத்தும் மத்திய மாகாண மாகாண சபையின் அனுமதி பெற்றாலன்றி நடைமுறைக்கு வரலாகாது. மாகாண சபையின் அனுமதி பெறப்பட்ட பின்னர், அவ்வாறான அனுமதிகள் வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

(3) இதன் 2 ஆம் உட்பிரிவில் காட்டியவாரான வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் உபவிதிகள், அவ்வாறு பிரசுரமானதன் பின்னர் இந்நியதிச்சட்டத்தால் இணைக்கப்பட்டதான சட்ட வலுவினைப்பெறல் வேண்டும்.

ஆணைக்குழு அங்கத்தவர்களின் சுதந்திரம்.

33. ஆணைக்குழுவானது அதன் கூட்டுப்பொறுப்பிலோ அல்லது அதன் அங்கத்தவர் ஒருவராலோ உத்தியோக ரீதியில் எடுத்தமுடிவொன்று மேற்கொண்ட நடவடிக்கையொன்று அல்லது மேற்கொள்ளத் தவறிய விடயமொன்று தொடர்பாக அங்கத்தவர் அல்லது ஆணைக்குழுவிற்கெதிராக குற்றவியல் அல்லது சிவில் சட்ட நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாலாததாதல் வேண்டும்.

34. இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குக் குந்தகமின்றி, கூட்டுறவுச் சங்கமொன்றானது அதன் திறமையான செயற்பாட்டினைக் கருத்திற்கொண்டு - ஒப்பந்த அடிப்படையில் அல்லது சமயாசமய அடிப்படையில் அல்லது நாளாந்த வேதன அடிப்படையில் ஊழியர்களை சேவைக்கு அமர்த்திக்கொள்ளல்.

(அ) ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன் அவசியமெனக்கருதப்படும் விஷேடத்துவ தகைமையுடைய அல்லது நிபுணத்துவம் பெற்ற ஒருவரின் சேவையை ஒப்பந்த அடிப்படையில் குறித்தவொரு காலப்பகுதிக்கு சேவைக்கமர்த்திக் கொள்ளலாம்.

(ஆ) நாளாந்த வேதன அடிப்படையில் அல்லது வேலை அளவிற்கேற்ப கொடுப்பனவு தீர்மானிக்கப்படுவதான அடிப்படையில் சமயாசமய ஊழியர்களை சேவைக்கமர்த்திக்கொள்ளலாம்.

இருப்பினும், ஆணைக்குழுவின் சம்மதத்துடன் அன்றி அத்தகைய ஊழியர்களுக்கு அத்தகைய பதவியில் எவ்வித நிரந்தர சேவையும் வழங்கப்படாது.

35. (1) கூட்டுறவுச்சங்கங்கள் அல்லது அவற்றின் ஊழியர்கள் - தவறுகள்.

(அ) அவர் அல்லது அச்சங்கம் இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாறாக செயற்படின், அல்லது

(ஆ) ஆணைக்குழுவால் வேண்டப்படும் கருமமொன்றினை வேண்டுமென்றே செய்யத்தவறின், செய்ய மறுப்பின் அல்லது செய்யாது விடின் அல்லது வேண்டப்படும் தகவல் எதனையும் வழங்க மறுப்பின், தவறின், வழங்காது விடின், அல்லது

(இ) வேண்டுமென்றே பிழையான தகவலொன்றினை அல்லது அறிக்கையொன்றினை வழங்குமிடத்து இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றமொன்று புரிந்தவர் அல்லது புரிந்ததாதல் வேண்டும்.

(2) இதன் 1 ஆம் உட்பிரிவிற்காட்டியவாறான குற்றமொன்றினைப் புரிந்த கூட்டுறவுச் சங்கமொன்று அல்லது அதன் ஊழியர் நீதிமன்றமொன்றின் சுருக்கமுறை விசாரணையொன்றின் பின் குற்றவாளியெனக் காணப்படுமிடத்து ஆயிரம் ரூபாவுக்குக் கூடாத தண்டமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

(3) இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் கூட்டுறவுச்சங்கமொன்றின் ஊழியர்கள் அனைவரும் தான் அக்குற்றத்தினைத் தடுப்பதற்கான இயன்ற சகல நடவடிக்கைகளையும் மேற் கொண்டதாக அல்லது தான் அக்குற்றம் பற்றி அறிந்திருக்கவில்லையென நிரூபிக்காதவிடத்து அவ்வாறான குற்றத்திற்குப் பொறுப்பாளிகள் ஆகுதல் வேண்டும்.

(4) சங்க ஊழியர் ஒருவரை மீண்டும் சேவையிற் சேர்த்துக்கொள்ளல் தொடர்பாய் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றினை நடைமுறைப்படுத்தத்தவறும் கூட்டுறவுச் சங்கமொன்று குற்றவாளியெனக் காணப்படுமிடத்து அச்சங்கமானது,

(i) 2ஆவது உட்பிரிவின் கீழ் அத்தகைய குற்றத்திற்கு கட்டளை பிறப்பிக்கக் கூடியதான ஏதாவது தண்டத்திற்குரிய குற்றப்பணமொன்றிற்கு மேலதிகமாக, அத்தகைய குற்றத்திற்கு குற்றவாளியெனக் கணிக்கப்பட்டதன் பின்பும், அத்தகைய தீர்ப்பினை நடைமுறைப்படுத்தத் தவறும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 50 விகிதம் குற்றப்பணமொன்று செலுத்தப்படுவதற்கும்,

(ii) அத்தகைய குற்றப்பணம் ஒவ்வொன்றும் ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி அவ்வூழியர் மீண்டும் சேவைக்கு அமர்த்த வேண்டிய திகதியிலிருந்து மேற்படி கூட்டுறவுச்சங்கம் குற்றம் புரிந்ததென அறிவிக்கப்பட்ட திகதி வரையிலான காலப்பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு நாளும் அந்த ஊழியர் சேவையில் ஈடுபட்டிருந்தாரேயானால் அவரது சேவை நிறுத்தப்படாதிருந்திருக்குமேயானால் அவருக்கு உரித்தான பதவிக்குரிய சம்பள விகித அடிப்படையில் கொடுப்பனவு கணக்கிடப்பட்டு வழங்கப்படுதல் வேண்டும். கூட்டுறவு சங்கமொன்று இதன் உட்பிரிவின் (11) வது பந்தியின் கீழ் கொடுப்பனவுக்கு உள்ளாகின்ற பணத்தை மேற்படி கூட்டுறவுச்சங்கம் குற்றம் புரிந்துள்ளது என காணப்பட்ட நீதிமன்றத்தினால் சங்கத்துக்கு பிறப்பிக்கப்பட்ட தண்டனையாக அந்த நீதிமன்றத்தின் கட்டளையின்படி அறவிடக் கூடியதாக இருப்பதோடு, அவ்வாறு அறவிடப்படும் பணத்தை சம்பந்தப்பட்ட ஊழியருக்கு செலுத்த வேண்டும்.

36. உத்தியோக பூர்வமான வகையிலன்றி எந்த ஆளொருவரும் ஆணைக்குழுவினால் வழங்கப்படுவதான தீர்ப்பொன்றின் மீது அல்லது ஆணைக்குழுவின் அங்கத்தவரொருவர் மீது நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ, தானாகவோ அல்லது வேறு ஆளொருவர் மூலமோ செல்வாக்கைப் பிரயோகித்தல் குற்றமொன்றாகும். அவ்வாறான குற்றமொன்று நீதிவான் நீதிமன்றமொன்றின் சுருக்க முறை விசாரணையின் பின்னர் நிருபிக்கப்படின், ஆயிரம் ரூபாவுக்குக்கூடாத குற்றப்பணமொன்று அல்லது ஒருவருடத்திற்குக் கூடாத சிறைத் தண்டனை அல்லது அவ்விரண்டிற்கும் ஆளாதல் வேண்டும். ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தலையிடல்.

அனுமதியின்றி தகவல்களை வெளியிடுவது தடைவிதிக்கப்பட்டுள்ளது என்பது.

37. ஆணைக்குழுவின் அங்கத்தவரொருவர் செயலாளர், ஆணைக்குழு அலுவலரொருவர் அல்லது வேறு ஆளொருவர் தனது உத்தியோகபூர்வ நிலையிலன்றி தன் கடமையின்போது அறியவந்த தகவலெதனையும் ஆவணமெதனையும் விபரங்கள் எதனையும் பிரசுரிக்கவோ அல்லது வெளிப்படுத்தவோ ஆகாததாதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் நிருபங்கள் சிறப்புரிமையுடையன என்பது.

38. ஆணைக்குழு அதன் அங்கத்தவர், அலுவலர் என்போருக்கும் கூட்டுறவுச்சங்கமொன்று அதன் செயற்குழு அங்கத்தவர் அலுவலர் என்பவர்களுக்கும் இடையில் உத்தியோகரீதியாக நடைபெற்றதான, எழுத்துமூலமான அல்லது வாய்மூலமான தொடர்புகள் பற்றிய விபரங்களை ஆணைக்குழுவின் தவிசாளரின் எழுத்து மூலமான அனுமதியின்றி சட்ட விசாரணையொன்றின் போது வெளிப்படுத்துமாறு அனுமதிப்பதோ, பலவந்தப்படுத்தவோ ஆகாததாதல் வேண்டும்.

சில நியதிச் சட்டங்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் அதன் ஊழியர்களுக்கும் தொடர்புடையதாகாதாதல் வேண்டும் என்பது.

39. வேலைகொள்வோர் என்றவகையில் அல்லது ஊழியர்களின் சேவையுடன் தொடர்புடையோர் என்ற வகையில், கைத்தொழில் பிணக்குகள் சட்டமானது, கூட்டுறவுச்சங்கமொன்றிற்கு அல்லது ஆணைக்குழுவிற்கு ஏற்புடையதாகாதல் வேண்டும்.

பொருள் கோடல்.

40. இந்நியதிச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய –

"ஆணைக்குழு" எனப்படுவது மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவாகும்.

"ஆணையாளர்" எனப்படுபவர் மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருமாகும்.

"கூட்டுறவுச் சங்கம்" எனப்படுவது கூட்டுறவு அபிவிருத்திச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும், மத்திய மாகாணத்துள் இயங்குவதுமான சங்கமொன்றாகும்.

"மாவட்டம்" எனப்படுவது மத்திய மாகாணத்துள் அமைந்துள்ளதான நிர்வாக மாவட்டமொன்றாகும்.

"ஊழியர்" எனப்படுபவர் இந்நியதிச்சட்டத்தின் கருத்துப்படி கூட்டுறவுச் சங்கமொன்றின் ஊழியராகும்.

"அமைச்சர்" எனப்படுபவர், மத்திய மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அல்லது அக்கடமையை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஒருவராகும்.

"குறித்துரைக்கப்பட்ட" எனும் சொற்றொடர் இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுவதான உபவிதிகளில் குறித்துரைக்கப்படுவதான விடயங்களாகும்.

(பிரிவு 10)

**ஆணைக்குழு அங்கத்தவர்களால் செய்து கொள்ளப்படுவதான சத்தியப்பிரமாணம்/ பிரகடனம்**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கத்தவராக/ தவிசாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள ................ ஆகிய நான், மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கத்தவர்/ தவிசாளர் என்ற வகையிலான எனது கடமைகளை பயமோ, பாரபட்சமோ, பட்சாதாபமோ, தீய நோக்கமோ இன்றி மேற்கொள்வேனெனவும், கடமைக்கப்பால் என்னால் அறியப்படும் விடயங்களெதனையும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, வெளியிடமாட்டேன் எனவும், இத்தால் சத்தியம்/ உண்மையுடனும் நேர்மையுடனும் பிரகடனம் செய்கின்றேன்.

..........................
கையொப்பம்.

இன்று .......... வருடம் ......... மாதம் ............. நாள் என் முன்னிலையில் சத்தியம்/ பிரகடனம் செய்யப்பட்டது.

..............................
உயர் நீதிமன்ற நீதியரசர்.

**ஆணைக்குழுவின் அலுவலர்களால் செய்துகொள்ளப்பட வேண்டிய சத்தியப்பிரமாணம்/ பிரகடனம்**

மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளராக/ அலுவலராகக் கடமைபுரிய வேண்டப்பட்டுள்ள ........ ஆகிய யான், ஆணைக்குழுவின் செயலாளர்/ அலுவலர் என்ற வகையிலான எனது கடமையின் போது அறியவருவதான கடமைரீதியான தகவல்கள், ஆவணங்கள், செய்திகள் என்பவற்றுள் அடங்கியுள்ள விடயங்களை முழுமையாகவோ, அன்றி அதன் ஒருபகுதியையோ, உத்தியோக அடிப்படையிலல்லாது வெளியிடமாட்டேன் என சத்தியம்/ உண்மையுடனும் நேர்மையுடனும் பிரகடனம் செய்கின்றேன்.

........................
கையொப்பம்.

இன்று ........ வருடம் ......... மாதம் ........... நாள் என் முன்னிலையில் சத்தியம்/ பிரகடனம் செய்யப்பட்டது.

........................
கூட்டு. ஊ. ஆணைக்குழுவின் தவிசாளர்.

10-325/1